பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**04 12 2025** **THURSDAY** **7. 15 PM**

ஆகாஷவாணி

***தலைப்புச் செய்திகள்***

1. புதுதில்லி வந்து சேர்ந்த ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டினை விமான நிலையத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி வரவேற்றார்.

2. நேர்மையாக வரி செலுத்துவோர் தங்களது தொழிலை கண்ணியத்துடன் மேற்கொள்வதற்கான சூழலை மத்திய அரசு உருவாக்கி தந்துள்ளதாக நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி கூறியுள்ளார்.

3. கடந்த 11 ஆண்டுகளில் நாட்டில் உள்ள விமான நிலையங்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகி உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. மிசோரம் முன்னாள் ஆளுநர் ஸ்வராஜ் கௌஷல் இன்று காலமானார், அவருக்கு வயது 73.

5. சென்னையில் நடைபெற்றுவரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அனாகத் சிங், ஜோஷ்னா சின்னப்பா ஆகியோர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

. . . . இனி விரிவான செய்திகள்

<<<<<>>>>>

ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டின் சற்றுமுன் புதுதில்லி வந்தடைந்தார்.

விமான நிலையத்தில், அவரை பிரதமர் திரு நரேந்திர மோடி வரவேற்றார்.

புதுதில்லியில் நாளை நடைபெறும் 23-ஆவது இந்தியா — ரஷ்யா ஆண்டு உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியா வந்துள்ள புட்டின் பிரதமர் திரு நரேந்திர மோடியுடன் இருதரப்பு பேச்சுக்கள் நடத்த உள்ளார்.

உலகளாவிய விஷயங்கள் குறித்தும் மண்டல அளவிலான பிரச்சினைகள் குறித்தும் இருதலைவர்களும் பேச்சு நடத்த உள்ளனர்.

பாதுகாப்பு, பொருளாதாரம், வர்த்தகம், சுகாதாரம், கலாச்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருநாடுகளுக்கும் இடையே முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளன.

ரஷ்ய அதிபரை கௌரவிக்கும் வகையில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவருக்கு விருந்தளிக்க உள்ளார்.

<<<<<>>>>>

இந்தியா — ரஷ்யா இடையேயான நல்லுறவு காலம் கடந்து நீடித்து வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இந்தியா — ரஷ்யா அரசுகளுக்கு இடையேயான 22-ஆவது ராணுவ ஆணைய கூட்டத்தில் உரையாற்றிய அவர், உலகளாவிய பொருளாதாரம் சரிவை சந்தித்த போதிலும், இருநாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகள் சிறப்பாக இருந்து வந்துள்ளதாக குறிப்பிட்டார்.

கடந்த இரண்டாயிரமாவது ஆண்டு இந்தியா — ரஷ்யா ஒத்துழைப்பு ஒப்பந்தம் கையெழுத்தானபின் பாதுகாப்பு தொடர்பான இருதரப்பு ஒத்துழைப்பும் வலுப்பெற்றிருப்பதாக தெரிவித்தார்.

இவ்வாண்டு ஜூன் மாதம் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடியும், ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டினும் நடத்திய பேச்சுக்களின் அடிப்படையில் இருதரப்பு பொருளாதார உறவுகள் மேலும் வலுப்பெற்றிருப்பதாக அவர் கூறினார்.

கடந்த மாதம் மாஸ்கோவில் நடைபெற்ற இந்தியா — ரஷ்யா வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மாநாட்டிலும் ஆக்கப்பூர்வமான முடிவுகள் எடுக்கப்பட்டு அவை செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே, ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு **Andrei Belousov**, உரையாற்றுகையில், இருநாடுகளும் பரஸ்பரம் மதிப்பளித்து நட்புறவை பேணி காத்து வருவதாக தெரிவித்தார்.

இருநாடுகளும் பராமரித்துவரும் நீண்டகால நட்புறவு குறித்தும் அவர் குறிப்பிட்டார்.

தெற்காசிய மண்டலம் மற்றும் சர்வதேச அளவில் பாதுகாப்பில் இந்தியாவின் அணுகுமுறையை வரவேற்பதாகவும் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் இந்தியாவின் முப்படை தளபதிகளும், ரஷ்யாவின் ராணுவ தளபதிகளும் கலந்துகொண்டனர்.

<<<<<>>>>>

மாநிலங்களவையில் இரண்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெவ்வேறு பிரச்சினைகள் குறித்து அவையில விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி, விதி 267-ன்கீழ், தாக்கல் செய்த நோட்டீஸுகளை மாநிலங்களவைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் நிராகரித்தார்.

கேள்விநேரத்தின்போது இதை தெரிவித்த திரு ராதாகிருஷ்ணன், அவை நடவடிக்கைகளில் பட்டியலிடப்படாத பிரச்சினைகள் தொடர்பாக விதி 267-ன்கீழ், நோட்டீஸ் அளிக்க முடியாது என்று விளக்கம் அளித்தார்.

முக்கிய பிரச்சினைகளை எழுப்புவதற்காக மட்டுமே விதி **267-**ன்கீழ் ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டுவந்து விவாத்திற்கு கோரிக்கை வைக்க முடியும் என்று திரு சி பி ராதாகிருஷ்ணன் மேலும் தெரிவித்தார்.

<<<<<>>>>>

கடந்த **11** ஆண்டுகளில் நாட்டில் உள்ள விமான நிலையங்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகி உள்ளதாக சிவில் விமான போக்குவரத்துத் துறை இணையமைச்சர் திரு முரளிதர் மொஹல் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், **2014-**ஆம் ஆண்டு நாட்டில் **74** விமான நிலையங்கள் மட்டுமே செயல்பட்டு வந்ததாகவும், தற்போது இவற்றின் எண்ணிக்கை **164-**ஆக உயர்ந்துள்ளது என்றும் கூறினார்.

கடந்த பத்தாண்டுகளில் சிவில் விமான போக்குவரத்துத்துறை கணிசமான அளவில் வளர்ச்சி பெற்றிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த **2016-**ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட **Udan** திட்டத்தின்மூலம், புதிய விமான நிலையங்கள் அமைக்கப்பட்டு, மாநிலங்களுக்கு இடையேயான விமான போக்குவரத்து கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனால், விமான பயணச் செலவு கணிசமாக குறைந்திருப்பதாகவம் அவர் குறிப்பிட்டார்.

கடந்த நிதியாண்டில் 24 கோடி பயணிகள் உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான போக்குவரத்தை பயன்படுத்தி இருப்பதாகவும் திரு முரளிதர் மொஹல் தெரிவித்தார்.

ட்ரோன் பயன்பாடு குறித்த மற்றொரு கேள்விக்கு பதிலளித்த அவர், நாட்டின் 90 சதவீத பகுதிகள் வான்வெளி பசுமை மண்டலமாக அறிவிக்கப்பட்டு, ட்ரோன்கள் தடையின்றி பறப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

பசுமை மண்டலங்களை தவிர, மஞ்சள் மண்டலத்தில் ட்ரோன்கள் பறப்பதற்கு விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு அமைப்பின் அனுமதி தேவை என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

ட்ரோன் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான திட்டங்களை அரசு மேற்கொண்டு வருவதாக தெரிவித்த அமைச்சர், உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகைத் திட்டத்தின்கீழ், ட்ரோன்கள் உற்பத்திக்கு உத்வேகம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

<<<<<>>>>>

தமிழகம், கேரளா உள்ளிட்ட 9 மாநிலங்களிலும், 3 யூனியன் பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்டுவரும் வாக்காளர் பட்டியல்

சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின்கீழ், இதுவரை **50** கோடியே **90** லட்சம் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சுமார் **51** கோடி வாக்காளர்கள் உள்ள நிலையில், **99** புள்ளி எட்டு ஏழு சதவீதம் பேருக்கு படிவங்கள் வழங்கப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இவற்றில், **48** கோடி படிவங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணைய அறிக்கை தெரிவிக்கிறது.

கடந்த மாதம் **4**-ஆம் தேதி தொடங்கிய இந்த பணிகள், வரும் **11**-ஆம் தேதிவரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

நேர்மையாக வரி செலுத்துவோர் தங்களது தொழிலை கண்ணியத்துடன் மேற்கொள்வதற்கு உகந்த சூழலை மத்திய அரசு உருவாக்கி தந்திருப்பதாக நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று வருவாய் புலனாய்வு இயக்குனரகத்தின் **68**-ஆவது நிறுவன நாள் நிகழ்ச்சிகளை தொடங்கிவைத்து பேசிய அவர்,

புலனாய்வுத்துறை அதிகாரிகள் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நாட்டின் எல்லைப்பகுதியில் போதைப்பொருள் கடத்தல், சட்டவிரோத நிதி பரிவர்த்தனை ஆகியவற்றை முழுமையாக தடுப்பதற்கு மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது அவசியமாகிறது என்றார்.

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பவர்களுக்கு சட்டவிரோதமாக நிதி கிடைப்பதை தடுக்க வேண்டும் என்றும் திரு பங்கஜ் சௌத்ரி வலியுறுத்தினார்.

<<<<<>>>>>

மிசோரம் முன்னாள் ஆளுநர் ஸ்வராஜ் கௌஷல் இன்று காலமானார். அவருக்கு வயது 73.

ஸ்வராஜ் கௌஷல், முன்னாள் மத்திய அமைச்சர் மறைந்த சுஷ்மா சுவராஜின் கணவரும், தற்போதைய பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் பன்சுரி ஸ்வராஜின் தந்தையும் ஆவார்.

ஸ்வராஜ் கௌஷல் மறைவுக்கு குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள இரங்கல் செய்தியில், அவருடைய பங்களிப்புகள் என்றும் நினைவுகூரத்தக்கவை என்று கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள இரங்கல் செய்தியில், ஏழை எளிய மக்களின் மேம்பாட்டிற்காக தமது வழக்கறிஞர் தொழிலை பயன்படுத்தியவர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

மிக இளம் வயதிலேயே மிசோரம் மாநிலத்தின் ஆளுநராக பொறுப்பேற்று அம்மாநில மக்களின் நன்மதிப்பை பெற்றவர் ஸ்வராஜ் கௌஷல் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சென்னையில் நடைபெற்றுவரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அனாகத் சிங், ஜோஷ்னா சின்னப்பா ஆகியோர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அனாகத் சிங், 11-8, 11-6, 11-4 என்ற செட் கணக்கில் தென்னாப்பிரிக்காவின் Hayley Ward-ஐ வென்றார்.

மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் ஜோஷ்னா சின்னப்பா **6-11, 12-10, 11-1, 5-11, 11-5** என்ற செட் கணக்கில் தன்வி கண்ணாவை வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் வேலவன் செந்தில்குமாரும் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

-----------------

குவாலியர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஆரியன் ஷா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **6-2, 6-4** என்ற செட் கணக்கில், ஆஸ்திரேலியாவின் **Adrian Arcon**-ஐ வென்றார்.

**<<<<<END>>>>>**